Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன்-க்கு விரைவில் வருகிறது

## உள்கட்டமைப்பு தரம் உயர்தல், இன்னும் அகலமான பக்கவாட்டுப் பாதைகள், மேம்படுத்தப்பட்ட பொதுமக்களுக்கான இடங்கள்.

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 3, 2022) – டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் உருமாற்றம் அடைந்து வருகிறது, அதில் இந்த மாதம் துவங்கி, இந்தப் பகுதியில் இருக்கின்ற பழைய பிரதான தண்ணீர்க்குழாய்கள், கழிவுநீர் வடிகால்குழாய்கள் ஆகியவற்றுக்கு பதிலாக புதியவற்றை அமைத்தல், அதைத் தொடர்ந்து, பக்கவாட்டுப்பாதைகளை புதிதாக அகலப்படுத்தி மாற்றி, மற்றும் செப்பனிடுதல், மற்றும் சாலைகளை மீண்டும் பாவுதல் ஆகிய அனைத்து பணிகளையும் பீல் பிராந்திய நிர்வாகம் மேற்கொள்ள உள்ளது.

ஜனவரி மாத இறுதியில் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு, - வானிலை அனுமதி மற்றும் COVID-19 தொற்றுநோய் அனுமதிக்கும் பட்சத்தில்- 2025 இல் அவை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பீல் பகுதியானது கட்டுமானத்திற்கான பொதுவாக தாக்கல் செய்யவிருக்கும் திட்டங்கள் பற்றி எல்லோருக்கும் பகிர்ந்துள்ளது. இது பற்றிய தகவல்களை குடியிருப்பாளர்களும் வணிகங்களும் இங்கு மீள்பார்வையிட்டு தங்கள் கேள்விகள் அல்லது கருத்துகளைச் சமர்ப்பிக்கலாம்

க்வீன் ஸ்ட்ரீட் கட்டுமானப் பணிகளின் போது, ஒவ்வொரு திசையிலும் ஒரே ஒரு பாதைவழி(லேன்) மட்டுமே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும். பிரதான வீதி (மெயின் ஸ்ட்ரீட்) கட்டுமானப் பணிகளின் போது, போக்குவரத்து ஒரு திசையில் ஒரு வழிப்பாதையாக மட்டுமே பராமரிக்கப்படும். வணிக இடங்களை அணுக பாதசாரிகள் அனுமதிக்கப்படுவார்கள், மற்றும் நடைபாதைகளை பொதுமக்கள் உபயோகிக்கலாம். மரங்கள் அடர்ந்த சாலைகளில் சில குறுகிய கால வேலைகள் இருக்கும், அதைத் தொடர்ந்து சாலையோர தடுப்புகள் (கர்ப்கள்) மற்றும் நடைபாதைகள் முழுமையாக மாற்றப்படுகின்ற வேளையில், பாதசாரிகள் தெருவின் மறுபக்கத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

இந்த மேம்பாடுகள் அனைத்தும் நகரத்தின் ஒருங்கிணைந்த டவுண்டவுன் திட்டத்தை உந்தச் செய்வதில் ஒரு முக்கிய பகுதியாகும்; டவுண்வுன் ப்ராம்ப்ட்டனின் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் இந்தப் பல முயற்சிகளும், வளர்ச்சி மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் உள்கட்டமைப்புக்கான திட்டப்பணிகளுக்கு வழிகாட்டுகிறது.

மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca.

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

**டவுண்டவுன் சாலை எழில் கூட்டுதல்**

பிராந்தியத்தின் டவுண்டவுன் உள்கட்டமைப்புக்கான பணிகள் முழு ஒருங்கிணைப்புடன் சாலைகளுக்கு எழில்கூட்டும் முனைப்புகளை நோக்கி நகர்கிறது; தற்போதுள்ள நடைபாதைகளை கற்கள் பாவிய பக்கவாட்டு நடைபாதைகளாக மாற்றுவது மற்றும் க்வீன் ஸ்ட்ரீட் மற்றும் பிரதான வீதி (மெயின் ஸ்ட்ரீட்) ஆகிய இரு வீதிகளின் இருபுறமும் அகலமான நடைபாதைகளுடன் சாலைகளை மறுசீரமைப்பது உள்ளிட்ட தெருக்களுக்கு எழில்கூட்டும் முயற்சிகளில் நகரம் முன்னேறி வருகிறது. வணிக நடவடிக்கைகள், பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு தரமான நகர்ப்புற இடங்களை உருவாக்குவதற்கும், எட்டோபிக்கோக் (Etobicoke) மற்றும் ஃப்ளெட்ச்சர்ஸ் க்ரீக் (Fletchers Creeks) ஆகிய இடங்களுக்கு இடையே செயல்பாடு மிக்க தொடர்பை உருவாக்குவதற்கும், நகர மையத்தில் மேம்படுத்தப்பட்ட பாதசாரி மண்டலத்தை உருவாக்குவதற்கும், இந்த ஏறத்தாழ $16.6 மில்லியன் முதலீடு உதவும்.

**டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் திட்டப்பணிகளுக்கான மையம்**

டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் திட்டப்பணிகளுக்கான மையம் (Downtown Brampton Projects Centre) (DBPC) இப்போது உள்ளபடியே திறந்துள்ளது. நகர வணிகங்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு உதவ, நகர ஊழியர்கள் தயாராக உள்ளனர்; மேலும் நகரம் புத்துயிர் பெறுவதற்கான திட்டங்களையும் முன்முயற்சிகளையும் தொடர்ந்து வழங்கவும் தயாராக உள்ளனர். கட்டுமானப்பணிகளின் போது பீல் பிராந்திய ஊழியர்களும் உடன் இருப்பார்கள்.

DBPC மூலம் ஆதரவளிக்கப்படும் திட்டங்களில் பிராந்தியத்தின் தண்ணீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர் வடிகால் மாற்றும் திட்டம் மற்றும் மை மெயின் ஸ்ட்ரீட் (My Main Street program) ஆகியவை அடங்கும். டவுண்டவுன் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் உள்ளூர் வணிகங்கள், டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் BIA மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளுக்கு சிறிய அளவிலான திட்டங்களைச் செயல்படுத்தவும், பொருத்தமான நகரத் துறைகளுக்கு கோரிக்கைகளை நேரடியாக எடுத்துச்செல்லவும் உதவுவார்.

www.brampton.ca/downtownbrampton எனும் வலைப்பக்கத்தில் DBPC பற்றி மேலும் அறியவும்

**உள்ளூரை ஆதரிக்கவும்**

கோவிட்-19 தொற்றுநோயால் ப்ராம்ப்ட்டனின் டவுண்டவுன் வணிகச் சமூகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது, மேலும் பொது இடங்களை மேம்படுத்துவதற்கான முக்கிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளில் தொடர்ந்து முதலீடு செய்யும் அதே வேளையில், இடையூறுகளைக் குறைப்பதற்கும் மக்களின் பொருளாதார மீட்சியில் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் நகரம் அர்ப்பணிப்புடன் உள்ளது.

இந்தச் சமயத்தில் டவுண்டவுனுக்குச் சென்று வணிக வேலைகளை தொடர்ந்து செய்துவர குடியிருப்புவாசிகள் உற்சாகமளிக்கப்படுகிறார்கள். ப்ராம்ப்ட்டன் நகரமே! உள்ளூரை ஆதரிக்கவும் எனும்

வலைத்தளத்தில் (Support Local Brampton website) இல் ப்ராம்ப்ட்டன் நகர சிறு வணிகங்களின் முழுப் பட்டியலை நீங்கள் காணலாம்.

கட்டுமானப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே உங்களுக்கு விருப்பமான வணிக ஸ்தலத்திற்குச் செல்லவும் அதற்கான வாகன நிறுத்துமிடம் பற்றிய முழு பட்டியலுக்கும், வருகை தரவும்: www.brampton.ca.

**ஒருங்கிணைந்த டவுண்டவுன் திட்டம் பற்றி**

ஒருங்கிணைந்த டவுண்டவுன் திட்டம் (IDP) என்பது செயல்வடிவம் கொடுப்பதற்கான வழிகாட்டும் படமாகும்- அதாவது டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் – இன் நடப்பில் இருக்கும் பல உள்கட்டுமான திட்டப்பணிகளை ஒருங்கிணைத்தல் எனக் கொள்ளலாம். 2051 ஆம் ஆண்டிற்குள்ளாக எதிர்கால வளர்ச்சி மற்றும் யுக்திரீதியான முதலீட்டுக்கு வழிகாட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்தையும் உள்ளடக்கும் தன்மை, புதுமைபடைத்தல் மற்றும் நிலைத்து நிற்கவல்ல தன்மை ஆகியவையே IDP இன் வழிகாட்டும் கொள்கைகள் ஆகும். இது உள்கட்டமைப்பு தரம் உயர்த்தல், நகர்ப்புற வடிவமைப்பு, நிலத்தின் பயன்பாடு மற்றும் திட்டச் செயல் நிரலாக்கத் தலையீடுகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்க உதவும் – இப்படியாக ப்ராம்ப்ட்டனை ஒரு முக்கிய பொருளாதார உந்துசக்தியாக, பிராந்திய கலாச்சார மையமாக மற்றும் புதுமை மாவட்டமாக நிலைநிறுத்துகிறது.

IDP பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/IDP.

**அறிஞர் கூற்றுக்கள்**

"எங்கள் கூட்டாளர்களுடன் சேர்ந்து, டவுண்டவுன் ப்ராம்ப்ட்டனின் உட்பொதிந்த சக்தியை வெளிக்கொண்டுவரவும், புத்துயிரூட்டவும், மேலும் எங்கள் டவுண்டவுன் மையத்தில் தரமான நகர்ப்புற இடங்கள் மற்றும் பாதசாரிகளுக்கான மேம்படுத்தப்பட்ட சாம்ராஜ்யத்தை உருவாக்கவும் நாங்கள் பணியாற்றி வருகிறோம். குறுகிய கால கட்டுமானப்பணிகள் இடையூறாக இருந்தாலும், இறுதியில், ப்ராம்ப்ட்டனை ஒரு பொருளாதார உந்துசக்தியாக, பிராந்திய கலாச்சார மையமாக மற்றும் புதுமைகளில் உலகளாவிய தலைவராக நிலைநிறுத்த இந்தத் திட்டப்பணிகள் உதவும். நமது குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகர்களின் பொறுமை காப்பதற்காக நாங்கள் பாராட்டுகிறோம், மேலும் இந்த பணி மேற்கொள்ளப்படும்போது உள்ளூர் ப்ராம்ப்டனை ஆதரியுங்கள் எனும் இயக்கத்தை முடுக்கி விடுவதற்காக நமது சமூகத்திற்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

*- பேட்ரிக் ப்ரவுன், மெயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் ஒரு பரவசமான உருமாற்றத்தினை மேற்கொண்டு வருகிறது. பிராந்தியத்தின் இந்த முதல் கட்ட கட்டுமானப் பணியானது, நமது நகரத்தின் உள்கட்டமைப்பின் நலம் பேணலுக்கு அவசியமானது; மேலும் நமது நகரத்தின் மையத்தை மேம்படுத்துவதற்காக தெருக்களுக்கு எழிலூட்டுதல் மற்றும் பிற முயற்சிகளைத் தொடர அடித்தளம் அமைக்கும். நமது நகரத்திற்கும், குடியிருப்பாளர்களுக்கும் மற்றும் உள்ளூர் வணிகங்களுக்கும், இந்தத் திட்டமிடப்பட்ட டவுண்டவுன் பணிகள் கொண்டு வரும் நன்மைகளை நாங்கள் எதிர்நோக்குகிறோம்."

*- பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள், 1 & 5; தலைவர், பொதுப்பணிகள் மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கோவிட்-19 தொற்றுநோயாலும், வணிகங்கள் தொடர்ந்து மூடப்பட்டு வருவதாலும் நமது  நகர வணிகங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன; பொருளாதார மீட்சிக்கான அவர்களின் கடினமான பயணத்தில் அவர்களுக்கு ஆதரவளிக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நமது வணிகங்களில் நடைபெறும் கட்டுமானப்பணிகளால் ஏற்படும் பாதிப்பைக் குறைப்பதற்காகவும், நகரத்திற்கு மறுசக்தியூட்டுவதற்காகவும், ஷாப்பிங் செய்தல், வெளியில் சென்று உணவருந்துதல் மற்றும் உள்ளூர் இடங்களுக்கு உலாவருதல் ஆகியவற்றைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நமது குடியிருப்பாளர்களை நான் ஊக்குவிக்கிறேன். பிராந்தியத்தின்  இயல்பான பணி நடந்துகொண்டிருக்கும் அதே நேரத்தில், அனைவரும் பயன்பெறவும் அனுபவிக்கவும் ஒரு துடிப்பான மற்றும் நெகிழ்ச்சியான நகரத்தை உருவாக்க டவுண்டவுனில் மேற்கொள்ளப்படும் எங்களின் பல கட்டுமானப் பணிகள் உதவும்."

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4,  தலைவர், பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நமது நகரத்தை மேம்படுத்துவதற்கும், நமது குடியிருப்பாளர்கள் வாழ, வேலை செய்ய மற்றும், விளையாடுவதற்கான முழுமையான சமூகங்களை உருவாக்குவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். பொதுமக்களுக்கான இடங்களை மேம்படுத்துவதன் மூலம், நாங்கள் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவோம், பொருளாதார மீட்சியை ஆதரிப்போம் மற்றும் நமது குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவோம். மிகவும் தேவையான மற்றும் உற்சாகமான இந்த வேலையை முடிக்க பிராந்தியத்துடன் இணைந்து பணியாற்றுவதை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில் உள்ள எங்கள் கூட்டாளர்களுடன் சேர்ந்து, எங்கள் நகரின் மையப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கான இடங்களை மேம்படுத்துகின்ற அதே வேளையில், எங்கள் நகர வணிகங்களை தொடர்ந்து மீட்டெடுப்பதற்கான ஆதரவளிக்கவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இந்த

மேம்பாட்டுப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் போது, நமது உள்ளூர் கடைகள், உணவகங்கள் மற்றும் சேவைகள் வணிகத்திற்காக திறந்திருக்கும் என்பதை நான் குடியிருப்பாளர்களுக்கு நினைவூட்டுகிறேன்! இந்த அற்புதமான மாற்றங்களுக்காக காத்திருப்பது மதிப்பு வாய்ந்து என்பதை நாங்கள் அறிவோம்!

*- சூஸீ காட்ஃப்ராய், செயல் இயக்குனர், டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் வணிக மேம்பாட்டு பகுதி (BIA)*

"டவுண்டவுன் பிராம்ப்டன் BIA சார்பாக, அந்தப் பகுதியின் உருமாற்றம் நடந்து கொண்டிருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்; இதன் மூலமாக எங்கள் உள்ளூர் வணிகங்களுக்கும் ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கும் கிடைக்கக்கூடிய பல நன்மைகளைக் கொண்டு வரும் என எதிர்பார்கிறோம். கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கங்களிலிருந்து நாம் மீண்டு வரும் வேளையில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது என்றாலும்கூட, ஷாப்பிங் செய்யவும், சாப்பிடவும் மற்றும் உள்ளூரில் உலா வரவும் நமது சமூகத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். டவுண்டவுனில் வாகன நிறுத்தம் செய்வதற்கு வசதியான விருப்பத்தெரிவுகள் பலவும் உள்ளன; அவற்றை நகரத்தின் இணையதளத்தில் காணலாம்; மேலும் நமது வணிகங்கள் திறந்த நிலையிலேயே உள்ளன மற்றும் உங்களுக்கு சேவை செய்யவும் தயாராக உள்ளன!"

*- கேர்ரி பெசிவல், டவுண்டவுன் ப்ராம்ப்ட்டன் வணிக மேம்பாட்டுப் பகுதி (BIA)*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். ***Twitter, Facebook,*** மற்றும் ***Instagram*** ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். ***www.brampton.ca*** இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பல கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca